**திருவேற்காடு நகராட்சி**
**நகர்மன்ற அவசரக் கூட்டம்**

**2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள்திங்கட் கிழமை மாலை 5.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கை**

| | |
|---|---|
| **நகராட்சி அலுவலகம்** | **தனி அலுவலர் மற்றும் ஆணையர்** |
| **திருவேற்காடு** | **திருவேற்காடு நகராட்சி** |

**பொருள் எண்.1**

திருவேற்காடு நகராட்சியிலுள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க **ஆர்கனிக் ஓமியோபதி மாத்திரைகள்** கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதித்தவர்களுக்கும் மற்றும் அப்பகுதியில் உள்ள பொது மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் வகையில் வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி மாத்திரைகள் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ள தற்போது, மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவும் காலமாக உள்ளதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதியும், விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஆர்கினியம் ஆல்பம் ஓமியோபதி மாத்திரைகள் கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.50000/– ஆயிரத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3246/2020/எச்1)

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்.1208 அனுமதிக்கப்பட்டது,

---

பொருள் எண்.2

(அ) திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் பாதுகாப்பான முறையில் குப்பைகள் சேகரிக்கவும் மற்றும் மருத்துவக்கழிவுகள் அப்புறப்படுத்தவும் தூய்மை பணியாளர்கள் ஈடுப்படுத்தப்படுகின்றனர்.இப்பணியாளர்கள் பணி முடித்து வீட்டிற்கு செல்லும்போதும் மற்றும் வீட்டிலிருந்து பணிக்கு வரும்போதும் காவல்துறையினரின் சோதனைக்கு ஆளாகின்றனர். எனவே, **இருளிலும் சுடர்விடும் வண்ணம் திருவேற்காடு நகராட்சி என பெயர் பொரித்த சீருடைகள்** 500 எண்ணிக்கையில் வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளரின் 06.04.2020 தேதிய குறிப்பில் கோரியதை தொடர்ந்து கொள்முதல் செய்து பணிகள் மேற்கொண்டமைக்கும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.1.25 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3452/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ. இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகளின் கீழ் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக களப்பணிகள் மேற்கொள்வதற்கு (01.10.2020 முதல் 31.12.2020 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 75 DBC பணியாளர்களை வெளி கொணர்வு முறையில் தருவித்துக் கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.28.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2990/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்.1209 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 3**

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது, தொடர்ந்து பொது சுகாதாரப் பணிகள் தடையேதும் ஏற்படாமல் பணி மேற்கொள்ளவும் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதை தடுக்கவும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி டிராக்டர் சப்ளை செய்யும் **M/s.ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட்.,** மூலம் 5 எண்ணிக்கையில் டிராக்டர் சப்ளை செய்ய நகர்மன்ற தீர்மானம் எண். 1016 நாள்.28.02.20 ன்படி 01.03.2020 முதல் 31.05.2020 வரை மூன்று மாத காலத்திற்கு அதே விலைவிகிதப்படி சப்ளை செய்ய பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதால் மேலும் மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லை என்பதால் சுகாதார பணிகள் அவசர அவசியத்தை கருதி பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1136, நாள்.29.05.2020 ன் படி அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து 01.06.2020 முதல் 31.08.2020 வரை மூன்று மாத காலத்திற்கு அதே விலைவிகிதத்தின்படி 5 எண்ணிக்கையில் டிராக்டர் சப்ளை செய்யும் பணிக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதால் மேலும், ஒரு மாதத்திற்கு (செப்டம்பர் – 2020) கால நீட்டிப்பு வழங்கவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.3.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2281/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்.1210 அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் தூய்மை பணியாளர்கள் DBC டெங்கு நோய் தடுப்பு களப்பணியாளர்கள் நகராட்சி அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அலுவலக நிமித்தமாக வரும் பணியாளர்களுக்கு அடிக்கடி கைகள் கழுவதற்கு தேவையாக **Hand Sanitation** கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | கொள்முதல் | தொகை |
|---|---|---|---|
| 1 | Zeez Pharmaceuticals Private Limited,<br>C3, First Floor, Mangadu Apartments,<br>No.29, Ellayamman Kovil Street,<br>West Mambalam, Chennai-33. | 200 ML+GST<br>500ML+GST | 70/–<br>170/– |
| 2 | Suksha Mede Equipment Private Limited,<br>No.61-149, 2nd Floor, Kodambakkam, high Road, Chennai-17. | 200 ML+GST<br>500ML+GST | 80/–<br>190/– |
| 3 | Garoda Med Equipment,<br>No.15/5,chakrapaniStreet Extension,<br>West Mambalam, Chennai-33. | 200 ML+GST<br>500ML+GST | 75/–<br>180/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய **Zeez Pharmaceuticals Private Limited** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்காக. (ந.க.எண்.2312/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிகலாம் .

தீர்மானம் எண்.1211 அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள்:எண்.5**

திருவேற்காடு நகராட்சியில் 2020—2021 ஆம் ஆண்டு பொது சுகாதாரப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் வகையில் கீழ்குறிப்பிட்டுள்ள மூன்று பணிகளை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும் அதற்கான மூன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரவும் தினசரி நாளிதழில் வெளியிடவும், இப்பணிகளுக்கான செலவினங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | உத்தேச செலவினம் (இலட்சத்தில்) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|
| அ | 2020—2021 பொது நிதியின்கீழ், பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள மக்காத மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகளை, நாவலூர் அரக்கோணம் மற்றும் ரெட்ஹில்ஸ் அருகிலுள்ள தொழிற்சாலைக்கு சொந்த வாகனம் மூலம் எடுத்து சென்று அப்புறப்படுத்துதல் (அனைத்து செலவுகள் உட்பட) ந,க,2976/2020/எச்1 | ரூ. 29.58 | 5 மாதங்கள் |
| ஆ. | 2020—2021 பொது நிதியின் கீழ் பொது சுகாதாரப் பிரிவிற்கு குப்பைகளை அகற்றிட தேவையான போரா கோணிப்பைகள் மற்றும் பாட்டில் கோணிப் பைகள் சப்ளை செய்தல் (அனைத்து செலவுகள் உட்பட) ந.க.1680/2019/எச்1) | ரூ.19.80 | 5 மாதங்கள் |
| இ. | 2020—2021 திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நகராட்சி பகுதிகளில் தினசரி பொது சுகாதார பணியினை மேற்கொள்ள 5 எண்ணிக்கை டிராக்டர் சப்ளை செய்த( அனைத்து செலவுகள் உட்பட) ந.க.2935/2020/எச்1 | ரூ. 19.80 | 6 மாதங்கள் |

<u>அலுவலக குறிப்பு:</u>

அ. மூன்று பணிகளுக்கும் நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

ஆ. மூன்று பணிகளுக்கு தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விளம்பரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும், பணிகளுக்கான செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.1212 அனுமதிக்கப்பட்டது.

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையர்**
**திருவேற்காடு நகராட்சி.**